# அலகு-3

## தனிப்பட்டோர் மற்றும் பல்வேறு சமூகங்களின் கல்வி கோரிக்கைகள்

## (Educational Demands of Individuals and Diverse Communities)

### அனைவருக்கும் தொடக்கப்பள்ளி (Universalisation of Primary Education)

ஆறு வயது முதல் பத்து வயது வரையில் உள்ள குழந்தைகள் முறையான கல்வி பயிலத் தொடங்கும் நிலைக்குத் தொடக்க நிலைக் கல்வி என்று பெயர். தொடக்கப் பள்ளியில் ஐந்து ஆண்டுகள் சிறுவர், சிறுமியர் இலவசமாகக் கல்வி பயில்கின்றனர். தொடக்கப்பள்ளிகளில் தாய்மொழி வழியில் படித்தல், எழுதுதல், கணிதம் செய்தல் ஆகிய அடிப்படைக் கல்வியைக் கற்கின்றனர். இதைத் தவிர அறிவியல், சமூகவியல் போன்ற பாடங்களையும் கற்கின்றனர்.

அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 45-ல் இடம் பெற்றுள்ள தொடக்கக்கல்வி பற்றிய கொள்கையில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

### அனைவருக்குமான தொடக்கக்கல்வியின் அவசியம் (Importance of Universalisation of Primary Education)

1. பிறரால் ஏமாற்றப்படாமல் வாழவும், நல்ல பொருளாதார நலத்துடன் வாழவும் இது அவசியம்.

2. சமுதாயம் வளர வேண்டும் என்றால் தன்மானத்துடன் பிறரை சாராமல் வாழ வேண்டும் இதற்கு அனைவருக்கும் கல்வி அவசியம்.

3.நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் மேம்பாட்டிற்கும் கல்வி மிகமிக அவசியம்.

### அனைவருக்குமான தொடக்கக் கல்வியின் வளர்ச்சி

1. 1944 - இல் (CABE - Central Advisory Board of Education) மத்திய கல்வி அறிவுரை வாரியம் இந்தியக் கல்வி வளர்ச்சிக்கானத் திட்டத்தை வெளியிட்டது. இதன்படி,

அனைவருக்கும் இலவச கட்டாய ஆரம்பக் கல்வியை 40 ஆண்டுகளுக்குள் அளிக்க வேண்டும்.

2. 1948 - இல் அகில இந்தியக் கல்வி மாநாட்டில் இலவசக் கட்டாய கல்வியை பதினாறு ஆண்டுகளுக்குள் அளித்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

3.1960 - 61 இல் தமிழக அரசு 6 முதல் 16 வயது வரையிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் கட்டாய கல்வியை திட்டமிட்டுச் செயல்படுத்தியது.

4.1986- இல் புதிய தேசியக் கல்விக் கொள்கையின்படி 21- ஆம் நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்பே 14 வயது வரையிலான அனைவருக்கும் தரமான கட்டாயக் கல்வியை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று உறுதியளிக்கப்பட்டது. 5. 1999- இல் அனைவருக்கும் இலவச கட்டாய ஆரம்பக் கல்வி என்பது பேரியக்கமாக உருவெடுத்து செயல்பட்டு வருகிறது.

**அனைவருக்கும் தொடக்கக் கல்விக்காக தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்**

1. நாடெங்கும் புது தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதோடு 300 பேர் வாழும் சிறு பகுதிகளிலும் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. திறமையுள்ள ஏழை மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாடப்புத்தகம் வாங்க பண உதவியும் அளிக்கிறது.

3. இலவச மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன. தேக்கம், கழிவு இவற்றை ஒதுக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

4. எல்லா வருடமும் நல்லாசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நல்லாசிரியர்களுக்கான விருதுகள் வழங்கி கௌரவிக்கின்றது.

5. விளையாட்டுகள், கை வேலைகள், கலைகள், அறிவியல் துணைப் பொருட்கள் ஆகியவற்றில் அரசு அக்கறை காட்டுவதோடு பல ஒதுக்கீடும் செய்கிறது.

6. பாடத்திட்டத்தை மேம்படுத்துவதோடு தற்கால தேவைகளுக்கு ஏற்ப பாட நூல்களின் தளத்தையும் உயர்த்தி வருகிறது குறைந்த விலையில் புத்தகங்களும் குறிப்பீடுகளும் அரசே விற்பனை செய்கிறது.

7. ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தி ஆசிரியர்கள் கற்பிக்கும் முறைகளை மேம்படுத்த சலுகைகளும் வழங்குகிறது.

8.10 12-ம் வகுப்புகளில் முதலாவது மதிப்பெண் பெரு மாணவர்களுக்கு ரூபாய் ஆயிரம் பரிசுத்தொகை அளித்தும் மாணவர்களை ஊக்குவிக்கிறது.

**அனைவருக்கும் தொடக்க கல்வியை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள்**

மாணவர் சேர்க்கை சில மாநிலங்களில் வெற்றியடைந்த போதிலும் சில மாநிலங்களின் சில பகுதிகளில் இது அரிதாகவே உள்ளது. பெண் கல்வியை பற்றிய எதிர்மறையான எண்ணங்களை காணப்படுகின்றன கல்வியின் மதிப்பை பெற்றோர் சரிவர உணராமல் கிராமங்களில் பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும் தனித்தனியே ஆசிரியர்கள் இல்லாத பற்றாக்குறை கல்வியில் சம வாய்ப்பு அளிப்பதிலும் பிரச்சனைகள் காணப்படுகின்றன குடும்ப சூழ்நிலை மற்றும் குடும்ப வறுமையின் காரணமாக பள்ளி வயது குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் தொழிலாளியாக வேலைக்கு செல்வதாலும் பிரச்சனைகள் தோன்றுகின்றன.

**அனைவருக்குமான கல்வி அடைய ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் (Programmes to achieve Universalisation of Education)**

1. கரும்பலகைத் திட்டம் (Operation Blackboard Scheme)
2. அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம் (SSA - Sarva Shiksha Abhiyan)
3. தேசிய இடைநிலைக் கல்வி (RMSA Rashtriya Madhyamik Shiksha Abhiyan)
4. தேசிய உயர்கல்வித் திட்டம் (RUSA- Rashtriya Uchchatar Shiksha Abhiyan)

## கரும்பலகைத் திட்டம் (OBBS - Operation Black Board Scheme)

அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும் இன்றியமையாத கட்டுமான வசதிகளையும், கான்கிரீட் தளத்திளாலான கட்டிடம், கருத்தரங்கு, விழாக்கள் போன்றவை கொண்டாடிட ஒரு பெரிய அறை, போதுமான வகுப்பறைகள், நூலக அறை, ஆய்வக அறை ஆகியவற்றை உள்ளடக்கியது) தேவைப்படும் தளவாடங்களையும், (நாற்காலி, மேசை, கரும்பலகை, பாடநூல், அறிவியல் ஆய்வாக உபகரணங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவை) வழங்கிடுவது கரும்பலகை இயக்கத்தின் முக்கிய அம்சமாகும். ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தது ஒரு பெண் ஆசிரியை உள்பட இரண்டு ஆசிரியர்களையாவது பணியாற்றச் செய்திடல் வேண்டும் என்பது இத்திட்டத்தின் மற்றொரு சிறிய நடவடிக்கையாகும். தொடக்கப் பள்ளிகளின் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம், கல்வித் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

## சர்வ சிக் ஷா அபியான்/ அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம் (SSA)

இந்திய அரசியல் சாசனத்தின் 45 வது பிரிவின்படி 6 வயது முதல் 14 வயது வரையிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாயமாக இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1. குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், தக்க வைத்தல் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

2. பல்வேறு சமூக பிரிவுகளுக்கு இடையே யுள்ள பாலின வேறுபாடுகளையும், இடைவெளிகளையும் இணைக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

3. 1998 - ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டு மாநிலக் கல்வி அமைச்சர்கள் வழங்கிய பரிந்துரைகளை தொடர்ந்து 2001 -ஆம் ஆண்டு சர்வ சிக் ஷா அபியான்(SSA) தொடங்கப்பட்டது.

**SSA - வின் இன்றியமையாத அம்சங்கள்**

1. தொடக்கக் கல்வி நிர்வாகத்தில் தன்னாட்சி நிறுவனம் மற்றும் பிற அடித்தள கட்டமைப்புகளும் இணைந்து செயல்படுகின்றன.

2. அடிப்படை கல்வி மூலம் சமூக நீதி மேம்படுத்துவதற்கான வாய்ப்பே இத்திட்டமாகும்.

**சர்வ சிக் ஷா அபியானின் குறிக்கோள்கள்:**

1. 2003- ஆம் ஆண்டுக்குள் பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்.

2. வாழ்க்கைக்கான கல்வியில் திருப்திகரமான தரத்தை அடைய வலியுறுத்துவதே தொடக்க கல்வியின் நோக்கமாகும்.

3. பள்ளியில் சேர்ந்த அனைத்து குழந்தைகளையும் தக்கவைத்தலை உறுதி செய்தல்.

4. சமூகம் மற்றும் பாலின சமத்துவ இடைவெளிகளை ஆரம்ப நிலையிலும் தொடக்கக் கல்வி நிலையிலும் இணைத்தல்.

5. அனைத்து குழந்தைகளுக்கும் 5 ஆண்டுகள் முழுமையாக ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்திருத்தலை உறுதி செய்த வேண்டும்.

6. பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் அனைவரையும் 2010 ஆம் ஆண்டுக்குள் இடை நிறுத்தமின்றி தக்க வைத்தல்.

**புதிய கல்விக் கொள்கையின் முயற்சிகள்**

1986 - ல் வெளியிடப்பட்ட புதிய கல்விக் கொள்கையும், அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்கும் திட்டத்தை வெற்றிபெறச் செய்ய பல புதிய செயல் திட்டங்களை வலியுறுத்தியுள்ளது.

1. கரும்பலகை இயக்கம் (Operation Blackboard)

2. சர்வ சிக் ஷா அபியான்(SSA) திட்டம் சுமார் 11 லட்சம் கிராமங்களில் 20.5 கோடி பேர் பயன்பெறும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

3.குழந்தை மைய கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு குழந்தைகளிடம் குறைந்தபட்ச கற்றல் தேர்ச்சியை (Minimum levels of learning) உருவாக்குதல்.

4. கிராமப்புற மாணவர்களின் வசதிக்கு ஏற்ப பள்ளி நாட்களையும், விடுமுறை நாட்களையும் மாற்றியமைத்தல்.

5. தொடக்கப்பள்ளிக் கல்வித் தரத்தை உயர்த்திட மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி மையங்களை(DIETs)நிறுவுதல்.

6. தேர்வுகளை புறவயத் தன்மை உடையதாக்கி, தொடக்கக் கல்வியில் முதல் ஐந்து வகுப்பு வரை எந்த வகுப்பிலும் மாணவர்களை தேக்கி வைத்தலை தவிர்த்தல்.

7. துவக்கப் பள்ளியிலிருந்து விடுபட்டவர்கள் தங்கள் பகுதியில் பள்ளி யில்லாதோர், வேலைக்குச் செல்லும் குழந்தைகள் போன்றோருக்கான முறைசாராக் கல்வி திட்டங்களைச் செயல்படுத்துதல்.

8. முறைசாராக் கல்வி முறையில் நன்கு கற்கும் குழந்தைகள், விரும்பினால் முறையான கல்வி முறைக்கு எளிதில் மாறும் வகையில் தொடக்கக் கல்வியை நெகிழ்ச்சியுடையதாக ஆக்குதல்.

## ஒருங்கிணைந்த கல்வி (Integrated Education)

ஒருங்கிணைந்த கல்வியானது இந்திய அரசாங்கத்தின் நலத்திட்ட அமைச்சகத்தால் 1974 - ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஓர் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு புத்தகங்கள், எழுதுபொருட்கள், பள்ளி சீருடைகள், போக்குவரத்து, சிறப்பு சாதனங்கள் மற்றும் கருவிகளை வழங்க நிதியுதவி அளித்து வருகிறது. பள்ளிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த நமது மாநில அரசு 50 விழுக்காடு பண உதவியை அளித்து வருகிறது. ஆனால் பயிற்சி பெற்ற ஆசிரியர், இயலாமை யுடைய குழந்தைகள் மற்றும் அவர்களுக்கான கல்வித்

தேவையை புரிந்து கொள்ளும் விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடியவில்லை.

இன, மொழி, தொழில் கலாச்சாரத்தில் வேறுபட்டாலும். ஏழ்மை, பின்தங்கிய நிலை, அறியாமையில் ஒன்றுபட்ட லட்சக்கணக்கான மக்களை ஒருங்கிணைத்து கல்வி அளிப்பதே ஒருங்கிணைந்த கல்வியாகும். சகிப்புத்தன்மை, பிறருக்கு உதவுதல், பிறரோடு பகிர்ந்து கொள்ளுதல், இணைந்து செயல்படுத்தல், சீரிய மனப்பான்மைகளை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகியவற்றை கற்றுத் தேர்ச்சியடைதலே கல்வி இத்தகைய கல்வி முறையே ஒருங்கிணைந்த கல்வி எனப்படும்.

## அனைவரையும் உள்ளடக்கிய கல்வி (Inclusive Education)

உள்ளடக்கிய கல்வி என்பது மாணவர்களுக்கு ஒரே வகுப்பில் சேர்ந்து கல்வி பயில்வதாகும். கற்றல் திறன் குறைபாடு உடையவர்கள், பல மொழி பேசுபவர்கள் அனைவரும் ஒன்றாக கல்வி பயில்வதற்கு உள்ளடக்க கல்வி என்று பெயர்.

பல்வேறு சாதி விருப்பு, இனம், மதம் கொண்ட அனைத்து குழந்தைகளும் மிக அருகில் உள்ள பள்ளியில் ஒன்றாக பயில்வதே உள்ளடக்கிய கல்வி என்று பெயர்.

**உள்ளடக்கிய கல்வியின் அடிப்படை கொள்கைகள்**

1. பள்ளியிலுள்ள கலாச்சாரம், கொள்கைகளை மறு சீரமைத்து அவை பலதரப்பட்ட மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்தல். 2.மாணவர்களுக்கிடையே காணப்படும் வேற்றுமை வேற்றுமைகளை இயல்பாக கருதி அவற்றை ஏற்றுக்கொள்ளுதல்.

3. மாணவர்களிடையே காணப்படும் பலதரப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்தல்.

4. கற்றல் உத்திகள், பொறுத்தமான கலைத்திட்டம் மூலம் மாணவர்களுக்கு தரமான கல்வியை அளித்தல்.

**உள்ளடக்கிய கல்வியின் பயன்கள்**

1. இக்கல்வி முறையானது, கற்றலை எளிதாக்கவும், வரவேற்கத்தக்கதாகவும், சமூகத்தில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் பயனளிக்க கூடியதாகவும் உள்ளன.

2. எவ்வகையான கற்போரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இக்கல்வி அமைப்பு உள்ளது.

3. ஏதோ ஒரு காரணத்தால் பள்ளியை விட்டு விலகிய மாணவர்கள் இயல்பான மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பினை பெறுகின்றனர்.

**அனைவருக்கும் கல்வி அடைவதற்கான சவால்கள் (Challanges in Achieving Universalisation of Educationa)**

1. எல்லோருக்கும் கல்வி கிடைப்பதற்குரிய வாய்ப்பு வசதிகள் பெருகும் வேகத்தைவிட மக்கள் தொகை பெருகுதல்.

2. கல்வியில் சம வாய்ப்பு அளிப்பதில் உள்ள பிரச்சனைகள்.

3. மக்கள் ஏழ்மை நிலையில் வாழ்ந்ததால் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகளைப் பணியில் அமர்த்தி கொள்ளல் போன்ற காரணங்களால் கல்வியறித்தலில் இடையூறு அமைந்தன. 4. பெற்றோர்களின் வீட்டுக்கு அருகில் இருந்து 23 கிலோமீட்டர் தூரத்துக்குள் பள்ளி இல்லாமை.

5. பெண்களைப் பள்ளியில் சேர்ப்பது கஷ்டமாயிருந்தது ஏனெனில் அவர்களின் உதவி வீட்டில் தாய்க்குத் தேவையிருந்தது.

6. பெண்களுக்கு கல்வி அவசியமில்லை என்று தவறாக ஏழை எளியவர்கள் கருதுகின்றனர்.

7. பள்ளி வேலை நேரம், கிராம மக்கள் வாழ்க்கைக்கு ஏற்ப அமையாமல் எல்லா பள்ளிகளும் ஒரே நேரத்தில் திறந்து ஒரே நேரத்தில் மூடப்படுகிறது எனவே பள்ளி நேரம் கிராம மக்களுக்கு ஒத்து வருவதில்லை.

8. பெற்றோரின் ஏழ்மை பிறர் வற்புறுத்தலுக்காகவோ தாமே விரும்பியோ சேர்ந்த பின்னர் புத்தகம், பலகை, சீருடை வாங்கித்தர முடியாததால் இடையில் நின்று விடுதல்.

9. பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் அன்றாட வாழ்க்கையோடு தொடர்பு கொண்டனவாக இல்லை

10. தொடக்கப்பள்ளிகள் திறந்து செயல்படுவதற்கு மாநில அரசுக்கு நிதி பற்றாக்குறை இருப்பதால்.

11. பள்ளிகளின் மோசமான மேலாண்மையால் குழந்தைகள் பாதியில் நின்று விடுகின்றனர். 12. உடல் ஊனமுற்ற, மனவெழுச்சி குன்றிய குழந்தைகளால் தொடக்கப்பள்ளிகளில் இணக்கமாகப் போக முடிவதில்லை.

13. படிப்பின் மதிப்பைப் பெற்றோர் சரிவர உணர்வதில்லை பழைய முறைகளை, நிலைகளை மாற்ற விரும்புவதில்லை.

## கூட்டு வாழ்க்கை மற்றும் அமைதியான வாழ்க்கைக்கான கல்வி (Education for Collective living and Peaceful living)

1. இந்தியா உலக நாடுகளிடையே சமாதானத்துடன் வாழ விரும்பும் நாடு உலக மக்களிடம் அமைதியுடனும் நட்பு மனப்பான்மையுடனும் அணுகுகின்றது. எனவே ஒரு சாரருடன் கூட்டு சேர்ந்து மற்றொரு சாராரை ஏன் பகைக்க வேண்டும். என நேரு இந்திய பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியுள்ளார்.

2. கூட்டு வாழ்க்கை அதாவது குடும்பத்தில், சமுதாயத்தில் பிற நாடுகளுடன் கூட்டு சேர்ந்து கல்வி, பொருளாதார பிரச்சனை போன்ற பல பிரச்சனைகளை சமாளித்தால் அமைதியான வாழ்க்கைக்கு வழி வகுக்கும்

3. உலக அமைதிக்கு ஒரு கருவியாக இயங்க வேண்டிய கல்வி நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் வழி வகுத்து நாட்டின் முன்னேற்றத்துக்கு

உதவி படிப்படியாக நாடுகளிடையே நல்லுணர்வினை வளர்க்கும் வலுமிக்க கருவியாக அமைதல் வேண்டும்.

**உலக அமைதிக்கு ஊறு செய்யும் காரணிகள்**

1. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

2. பிற நாட்டினை பற்றிய தவறான எண்ணங்கள் 3. அரசியல் காரணிகள் 4. பிறர் பால் வெறுப்பு

5. சமய வெறி

6. சுயநலப் பிரச்சாரம் போன்றவை உலக அமைதிக்கு ஊறு செய்யும் காரணிகளாகக் காணப்படுகின்றன.

"அமைதி என்பது போரில்லாமல் இருப்பதை மட்டும் குடிப்பதன்று" உலக சமுதாயத்தில் சகோதர மனப்பான்மையையும், நீதியும் நிம்மதியும் நிறைந்த வளர்ச்சியுடன் இருப்பதாகும்.

**அமைதிக் கல்வியின் நோக்கம்**

வன்முறை தீவிரவாதம், இனவெறுப்பு, ஆயுதக் குவிப்பு, ஆக்கிரமிப்பு, பற்றாக்குறை, பஞ்சம், பட்டினி, பயம் முதலான அவலமும் அச்சமும் இல்லாமல் மனிதர்கள் எங்கும் அமைதியும், நிம்மதியும் திளைக்க வாழ்வதே அமைதிக் கல்வியின் நோக்கமாகும். மாணவர்களிடையே பரந்த மன பங்கினைத் தோற்றுவித்துப் பிற நாட்டினரைப் பற்றிய உண்மை அறிவை அளித்து, சமூகப் பிரச்சனைகளில் உணர்ச்சிவசப்படாமல் நேர்சிந்தனை வலியே உண்மை நிலையை உணர்ந்து செயல்படும் மனப்பக்குவத்தையும் கல்வி தோற்றுவிக்க வேண்டும்

ஒவ்வொரு நாளும் நாட்டில் தீவிரவாதம், நாசவேலைகள், ஆட்சேதம், பொருள் சேதம், போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இச்சூழலில் மனித நேயம், அன்பு, சகிப்புத்தன்மை, சகோதர உணர்வு, நல்லிணக்கம்,

சுகவாழ்வு முதலிய பண்புகளின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

**அமைதிக்கல்வியை பள்ளிகளில் அளித்திடும் நிலைகள்:**

அமைதிக் கல்வியை பள்ளிகளில் பின்வரும் நான்கு நிலைகளில் அளித்திடலாம்

1. உலக சமாதானம் குறித்த விழிப்புணர்வு (Awareness)
2. உலக சமாதானம் குறித்த வழிமுறைகளை ஆராய்தல் (Exploration)
3. உலக சமாதானத்திற்கான வழிமுறைகளின் செயலாக்கம் (Processing)
4. உலக சமாதானத்திற்கான வழிமுறைகளை தொகுத்தளித்தல் (Synthesis)

**நாட்டுப்பற்று**

1. கல்வியின் வாயிலாக மக்களிடம் நாட்டுப்பற்றை வளர்த்தல் வேண்டும்
2. நம் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உறுதுணையாகக் கல்வி அமைய வேண்டும்.
3. மாணவர்களிடம் நாட்டுப்பற்றை வளர்ப்பதன் மூலம் சமுதாயச் சீர்க்கேட்டை தவிர்க்க முடியும்
4. தேசிய கொடிக்கு மதிப்பளிக்க வேண்டும். 5. மாணவர்களிடம் சகோதரத்துவத்தை வளர்த்தல் வேண்டும்.

**தேசிய ஒருமைப்பாட்டுணர்வு (National Integration)**

தேசிய ஒருமைப்பாட்டுணர்வு என்பதன் விளக்கம்

1. தேசிய ஒருமைப்பாடு என்பது "ஒரு நாட்டின் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் உணர்வு ஆகும்".

2. இந்திய மக்கள் வெவ்வேறு மாநிலங்கள், மொழிகள், சாதிகள், சமயங்கள், நம்பிக்கைகள், கலாச்சார பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களாக உள்ளனர்.

3. "நாம் அனைவரும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு தாய் மக்கள்" என்ற ஒற்றுமை யுணர்வுடன் செயல்படுதலே தேசிய ஒருமைப்பாடு எனப்படும்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூறாக இருப்பவை

1. சாதி வெறி
2. மதவெறி
3. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்
4. மொழிவெறி
5. அரசியல் கட்சிகளின் குறுகிய கண்ணோட்டம்
6. இளைஞர்களிடையே மனமுறிவு
7. கலாச்சார வேறுபாடுகள்

**பள்ளிகள் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்திடுவதன் முக்கியத்துவம்**

இந்தியா பல்வேறு மாநிலங்கள், மொழிகள், சாதிகள், மதங்கள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் கொண்ட நாடாக இருப்பதால், அனைத்து மக்களிடமும் "நாம் அனைவரும் இந்தியர்" என்ற ஒற்றுமையுணர்வு தழைத்தோங்கியிருத்தல் மிகவும் அவசியமாகிறது

1. நாடு பிளவுபடாமல் தடுத்திட தேசிய ஒருமைப்பாடு அவசியமாகிறது
2. அரசியல் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தவும் நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்வு ஓங்கியிருத்தல் முக்கியமாகிறது.

3. நாட்டின் சரித்திரத்தை பாதுகாத்து அமைதியை நிலை நிறுத்துதல் ஆகியவற்றிற்கு தேசிய ஒருமைப்பாடே அடித்தளமாகிறது.

**கல்வி மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்திடும் வழிகள்**

1. கலைத்திட்டம்

2. மாணவர்கள் பல மொழிகள் கற்க ஊக்குவித்தல்

3. பள்ளிச் சூழல் (பள்ளி வளாகத்தில் சுதந்திர தினம், குடியரசு தினம் காந்தியடிகள் பிறந்த தினம், குழந்தைகள் தினம், ஆசிரியர் தினம், தேசிய ஒருமைப்பாட்டு தினம் போன்றவற்றை கொண்டாடி மகிழ ஏற்பாடுகள் செய்ய வேண்டும்

4. மாணவர்களிடம் மத சகிப்புத்தன்மையை ஏற்படுத்துதல்

**ஆசிரியரும் தேசிய ஒருமைப்பாடும்**

1. மொழி ஆசிரியர்கள் செய்யுள் பகுதியைக் கற்பிக்கும்போது பிற இந்திய மொழிகளில் காணப்படும் கவிதைகள், பல மொழிகள், ஆகியவற்றை இணைந்து தமது கற்பித்தலுக்கு மெருகூடலாம்.

2. வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள் வரலாறு நிகழ்வுகளை அவை நடைபெற்ற இடம் மற்றும் காலம் பற்றி கூறி மாணவர்களுக்கு தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கலாம்.

4. ஒவ்வொரு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களும் தங்கள் பாடங்களின் மூலம் ஒருமைப்பாட்டு உணர்வை மாணவர்களிடையே ஊட்டி சமுதாயத்திற்கு பயனுள்ள வகையில் மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.

## டெலர்ஸ் குழு அறிக்கையின் பார்வையில் கல்வியின் நான்கு தூண்கள் (Four Pillars of Education as Viewed by Delor's Commission Report)

கல்வியில் நான்கு தூண்கள் காணப்படுவதாக டெலர் குழு ஓர் அறிக்கையை குறிப்பிட்டுள்ளது. அவை

கல்வியின் நான்கு தூண்கள் (The Four Pillars of Education)

1. அறிந்து கொள்வதற்காக கற்றல் (Learning to know)
2. செயல்பட கற்றுக் கொள்வது (Learning to do)
3. ஒருங்கிணைந்து வாழக் கற்றல் (Learning to live together)
4. இணைந்து இருக்கக் கற்றல் (Learning to be)